<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 105/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லெனின்குமார் | நாள் | 11.01.2024 |
| தகப்பனார் பெயர் | அமரப்பன் | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

1) என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், என்னுடைய நிலத்திற்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால், ச.எண்கள்.174/2B, 175/2AB மேற்படி சர்வே எண்களில் 5 அயிட்டங்கள் உள்ளது.

2) நான் 5 அயிட்டங்கள் என சொல்வது சர்வே எண்களை தானா என்றால், ஆமாம். மேற்படி 5 எண்களையும் குறிப்பாக சொல்ல இயலுமா என்றால், எனக்கு நினைவில்லை. தாவா சொத்தின் பட்டா எண் என்னவென்றால், பட்டா எண் தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 8.19 ஏக்கர். மேற்படி தாவா சொத்திற்குள் எத்தனை வீடுகள் மற்றும் எத்தனை கிணறுகள் உள்ளது என்றால், மேற்படி சொத்திற்குள் வீடுகளும் இல்லை, கிணறும் இல்லை. ஒரே சர்வீஸ் லைன் மட்டும் உள்ளது.

3) தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், என் தந்தையின் பாட்டனார் வழியில் பூர்வீக சொத்தாகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை யார் யார் எல்லாம் சேர்ந்து எனக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால், என் தந்தை அமரப்பன், என் தாயார் வள்ளியம்மாள், என் சகோதரி தமிழ்செல்வி ஆகிய மூவரும் சேர்ந்து கடந்த 22.11.2010 ம் தேதியில் எனக்கு எழுதிகொடுத்தனர்.

4) மேற்படி தாவா சொத்தில் எப்பொழுதாவது வீடு இருந்ததா என்றால், என் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுப்பதற்கு முன்பு தாவா சொத்தில் வீடும்,

கிணறும் இருந்தது. மேற்படி வீட்டையும், கிணற்றையும் பற்றி மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை.

5) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் பட்டா எண்கள்.1255, 1435, 34 ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், நான் இவ்வழக்கில் 1255 பட்டாவை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதனால் மற்ற 2 பட்டாக்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், குறிப்பாக காரணம் எதுவும் இல்லை. விடுபட்டிருந்தால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6) வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்து குறித்து நானும், பிரதிவாதிகளும் விக்கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால், சரிதான். ஆனால் அது விக்கிரய ஒப்பந்தம் அல்ல. மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் விலைக்கு வாங்குபவர்களை அழைத்து வந்து தாவா சொத்தை விற்பனை செய்து கொடுக்க தரகு முகவர் அதிகார ஆவணமாகும். மேற்படி ஆவணம் ஏற்படுத்திகொள்ளும் பொழுது பிரதிவாதிகளிடம் எவ்வளவு முன்பணம் பெற்றேன் என்றால், முன்பணம் எதுவும் பெறவில்லை. என் சொத்தை விற்று தான் எனக்கு பணம் கொடுத்தார்கள்.

7) தாவா சொத்திலிருந்து எந்தந்த தேதிகளில் எத்தனை ஆவணங்கள் மூலம் எவ்வளவு அளவுள்ள சொத்துக்கள் என்னால் விற்கப்பட்டுள்ளது என்றால், மொத்தம் 14 கிரயங்கள் செய்யப்பட்டுள்ளது. அவை வெவ்வேறு தேதிகளில் வெவ்வேறு நபர்களின் பெயர்களில் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 14 கிரயங்களிலும் சேர்த்து மொத்தம் 1 ஏக்கர் 0.04 சென்ட் நிலம் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது.

8) மேற்படி கிரயங்கள் செய்யப்படுவதற்கு முன்பே பிரதிவாதிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பேரில் தாவா சொத்து முழுவதும் வீட்டு மனைகளாக பிரிக்கப்படும் நோக்கில் மேடுபள்ளங்கள் நிரவி சமன் செய்யப்பட்டன என்றால், சரிதான்.

ஆனால் நான் விற்க உத்தேசித்த சொத்தை சமன் செய்தேன். பொதுவாகவே தாவா சொத்துக்கள் மேடு பள்ளங்களாகத்தான் உள்ளன.

9) இவ்வழக்கு தாக்கல் செய்யப்படும் போது தாவா சொத்து முழுவதிலும் எந்த இடத்திலும் வீடோ, கிணறோ இல்லையென்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு தாவா சொத்திலிருந்த வீடு இடிக்கப்பட்டது என்றால், மேற்படி நிலத்தை நான் விற்கும்பொழுது வீட்டுடன் தான் கிரயம் பெற்றவருக்கு விற்றேன். கிரயம் பெற்றவர் தான் சொத்திலுள்ள வீட்டை இடித்துக்கொண்டார். குறிப்பாக என்னால் எந்த வருடத்தில் இடிக்கப்பட்டது என கூற இயலாது. ஆனால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 10 வருடங்களுக்குள் முன்பு இடிக்கப்பட்டிருக்கும்.

10) மேற்படி வீடு தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே இடிக்கப்பட்டுவிட்டதாக நான் சொல்லும் நிலையில், எதற்காக அதையும் சேர்த்து தாவா சொத்து விவரத்தில் காண்பித்துள்ளேன் என்றால், தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ளதால் அதை அவ்வாறே குறிப்பிட்டுவிட்டோம். இவ்வழக்கில் இ.ம.எண்.3/2020 என்ற எண்ணில் நான் மனு தாக்கல் செய்து, நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரியுள்ளேன் என்றாலும், அம்மனுவில் எவ்வித சொத்து விவரமும் என்னால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே வழக்குடன் தாக்கல் செய்த ஆவணங்களில் அந்த விவரங்கள் இருந்ததால் நான் அதை குறிப்பிடவில்லை.

11) மேற்படி இ.ம.எண்.3/2020 தாக்கல் செய்து அது தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், மீண்டும் அம்மனுவில் நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்று தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய இதுவரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட தாமதமானதால், மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் அம்மனுவை கோப்புக்கு எடுக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரிதான். வழக்கில் பார்த்துக்கொள்ளலாம் என நான் விட்டுவிட்டேன்.

12) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் எந்த இடத்திலும் சொத்து விவரத்தில் வீடு காட்டப்படவில்லை என்றால், சரிதான். வீடு இடிக்கப்பட்டுவிட்டதால் காட்டப்படவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.